அன்பளிப்பு . திரு . க . சுப்பிரமணிய ஐயரவர்கள்

VOL. I. MAY 1902. No. 1.

THE

Suguna Sundaram.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

“சற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி.”—குறள்.

CONTENTS.	PAGE.	[illegible]	பக்கம்.
1 Suguna Sundaram.	3	1 சுகுண சுந்தரம்	3
2 Mendicants.	3	2 இரவலர்	3
3 Thirthapuri.	7	3 தீர்த்தபுரி	7
4 Subhashani.	15	4 சுபாஷணி	15
5 Kathaprasangam.	18	5 கதாபிரசங்கம்	18
6 Car Festival.	19	6 இரதோச்சவம்	19
7 Marticulation Tamil Text Examiner for 1902.	21	7 மெட்ரிகிலேஷன் தமிழ் டெக்ஸ்டு எக்ஸாமினர்	21

Published by

T. P. VISWANATHA PILLAI, TAMIL PANDIT.

Yearly Subscription Rs. 3—0—0

TURAIYUR.

All Rights Reserved.

Half Yearly Subscription. Rs. 1—12—0.

Printed by the Managing Proprietor, T. S. SUBBARAMA AIYER, AT THE DODSON PRESS, TRICHINOPOLY.

LIST OF GENTLEMEN WHO PATRONIZE THE SUGNA SUNDARAM.

1 M. R. Ry. Prasanna Venkatachalla Reddi Garu, Zemindar of Turaiyu
2 „ A. Ganapathy Iyer Avl., Sub-Registrar of Turaiyur.
3 Brahma Sri Paramesvara Dhekshathar Avl., Chidambaram.
4 „ Venugopala Sastrigal Avl., Sanskrit Paudit Turaiyur.
5 „ Koteeswara Sastrigal Avl., Do.
6 „ Ramalinga Sastrigal „ Appakudal-Bhavani.
7 Sriman Ramakrishna Battachariar „ Sanskrit Pandit Bhaskarapuru
8 „ S. A. M. Seshadhri Achariar Avergal, Sanskrit Pandit, Chatt sastra Vâda Kalpaka tharu Vidyasala, Kumbakona
9 M. R. Ry. Kothanda Ramanujachariar Avl., Head Master Z. L. S. scho Turaiy
10 „ M. Rungasami Iyer Avl., Head Clerk Zemindar's Office „
11 „ L. Sundarayya Garu B. A., Egmore.
12 „ M. S. Pathmanabha Iyer Avl., 2nd Grade Pleader, Turaiyu.
13 „ I. Narayanasami Iyer Avl., Magistrate Clerk, Sub Magistrat Office Turaiy
14 „ P. Subrama Iyer Avl., Range Office Clerk, Turaiyur.
15 „ T. R. Raja Row Avl., Turaiyur.
16 „ K. Esvara Iyer „ „
17 „ K. Sankaralinga Mudaliar, Avl.. Proprietor. Dodson Pre Trich
18 „ T. S. Naga Ratnam Iyer Avl., Clerk Postal Supt's Offi Trichinopo
19 „ T. V. Ramachandra Iyer Avl., Kulitalai.
20 „ T. V. Venkata Rama Iyer Avl., Clerk, Purnachandro Press Tanj
21 „ G. Krishnier Avl., Supervisor of schools Dharmapuri Tal
22 „ P. K. Arthunari Iyer Avl., Erode.
23 „ G. Krishnier Goppichetti polayam.
24 „ Srikanta Iyer Avl., „
25 „ G. S. Thondi Raja Iyer Avl., Goppichettipolayam.
26 „ V. Padmanabha Sastrigal „ „
27 „ Ramanuja Iyengar Avl., 2nd grade Pleader Srirangam.
28 „ Sathasivam Pillai Avl., Supervisor of Schools Cuddalore.
29 „ Rama Iyer Avl.. do Srirangam.
30 „ Venkatarama Iyer Avl., Bangalore-Cantonment.

THE

SUGUNA SUNDARAM,

A Monthly Tamil Journal.

VOL. I.

MAY 1902–APRIL 1903.

சுகுண சுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி"—குறள்.

PUBLISHED BY

T. S. SUBBARAMA AIYAR,

Inamdhar,

TURAIYUR.

1902—1903.

[*All Rights Reserved.*]

Bound Vol. Rs. 3–8–0.] [Unbound Vol. Rs. 3.

PRINTED AT THE "MINERVA" PRESS,
BY THOMPSON & CO., BROADWAY, MADRAS.

அட்டவணை.

1-ம் புத்தகம்.

	பக்கம்
அநவத்யா ...	129 156
அருமைத் தமிழுக்கரசாங்கத்தால் நேரிடும் ஆபத்து ...	101
ஆச்சரியமான நிகழ்ச்சி, ஓர்— ...	64.
இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாசபை ...	161.
இரதோச்சவம் ...	19.
இர[illegible]லர் ...	3, 38.
இராமர் சீதை இவர்களின் வயோநிர்ணயம் ...	223.
இராஜமும், தங்கமும் (ஒரு சிறு கதை) ...	233.
இராஜ மைந்தர்களின் கல்விப்பயிற்சி ...	189.
உதவிக்ராண்டு சட்டம் 1902-03 ...	169.
கங்கையும், காவேரியும் ...	251.
கதாப்ரஸங்கம் ...	18, 47, 50
கூடைகள் ...	94, 127, 182.
கோர்ட்டு அமீனுக்களும், படிச்சேவகர்களும் ...	132.
சமாசாரக்குறிப்புக்கள் ...	45, 65, 139, 186, 215. 237, 260, 283.
சஹகமனம் ...	117.
சாபத்நி மாதாவின் கொடுமை ...	256.
சார்வாகமதமும் அதன் கண்டனமும் ...	147, 200, 218.
சார்வாகரின் ஓர் சங்கை ...	242.
சார்வாகரின் சங்கையின் மறுப்பு ...	272.
சிறுவர்க்கான கதைகள் .—	
(1) உண்மையை மொழிதல் ...	259.
(2) ஏமாற்றும் வார்த்தைகள் ...	282.
(3) ஒரு தப்பான எண்ணம் ...	192.
(4) கீழ்ப்படிதல் ...	115.
(5) நன்மையும் தின்மையும் ...	142
சுகாதார விளக்கத்தைப்பற்றிய விசேஷக்குறிப்புக்கள் ...	64, 96, 187, 258.
சுகுண சுந்தரம் ...	3.
சுகுண சுந்தர வாழ்த்து ...	120.
சுதேசாபிமானம் ...	205.
சுதேச பாஷைகளைக் கற்பதினால் உண்டாகும் பயன்	266.
சுபாஷிணி ...	15, 52. 80, 165.
சென்னை இராஜதானி துரைத்தனம் ...	254.
டில்லிமாநகரும், அதில் நடந்த நமது ஏழாவதுஎட்வர்டு அரசரின் மகுடாபிஷேகச்சிறப்பும்	208.
தர்மகர்த்தா நியமனம் ...	174.

தர்மம் ... 123.
தஸ்தாவேஜு எழுதுகிறவர்கட்கு வேண்டிய குறிப்புக்கள் ... 104, 134, 169.
தீர்த்தபுரி ... 7, 26, 68, 98.
துறையூரில் 7-வது எட்வர்டு சக்கிரவர்த்தியாருக்காக நிகழ்ந்த முடிசூட்டு வைபவம் 212.
துறையூர் தேவஸ்தானம் தர்மகர்த்தா வீரமாச்சாம்பட்டி சுப்பய்யர் ... 159.
துறையூர் உபாத்திமார் சங்கத்தின் தீர்மானம் ... 167.
தென் இந்தியா ரெயில்வே கம்பெனி ... 97.
நீதிக்கதை, ஒரு— ... 60.
நெஞ்சொடு கூறல் (செய்யுள்) ... 132.
பக்தி ... 76.
பச்சோந்தி (செய்யுள்) ... 57.
பட்சபாதமும் பிராத்ரு துரோகமும் அல்லது பிறமாதர் நட்பினுலுண் 279.
டாகும் நிந்தை ... 32, 85, 230.
பட்டாபிஷேகம் ... 74.
பத்துவித பக்திகள் ... 114.
பிரபஞ்ச விநோதங்கள் ... 279.
பெருமாள் திருமொழி ... 110, 177, 227.
பொய்கையாழ்வார் வைபவம் ... 245
மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்கள் ஏற்படுத்தியிருக்கும் பரீக்ஷைகள் ... 248.
மானிடப்பிறப்பின் அருமையும், அதனாலடைதற்குரிய பயனும் ... 194
மெட்ரிக்யுலேஷன் தமிழ் டெக்ஸ்டு எக்ஸாமினர் ... 21

INDEX.

VOL. I

	Page.
Anavadhya (A Puranic Story)	129, 156
Atheism, And its confutation	147, 200, 218
Atheism, Doubts anent—	242
Car festival	19
Chamelion (A poem)	57
Charity	123
Coronation (A poem)	74
Coronation of Emperor Edward VII, Town of Delhi and the—	208
Court Amins and Process Servers ...	132
Cruelty of the Ruling Body against Tamil Language, The—	101
Devotion	76
Dharmakarta, Election of—	174
Doubts anent Atheism, The Confutation of—	272
Emperor Edward VII, Demonstrations at Turaiyur for the—	212
For children : (1) An Erroneous Idea ...	192
(2) Good and Bad ...	142
(3) Obedience	115
(4) The Deceitful Words ...	282
(5) The Telling of Truth	259
Grant-in-Aid Code, 1902-1903	169
Hints for document writers, Invaluable—	104, 134, 169
Human Life, Its End and Aim	194
Indian National Congress, The— ...	161
King Edward VII, The Coronation of—(Apoem)	74
Madras Presidency, Administration of the—	254
Madura Tamil Sangam, Examinations prescribed by the—	248
Matriculation Tamil Text Examiner for 1902 ...	21
Mendicants	3, 38
Moral Story, A—	60

News and Notes, General— 45, 65, 139, 186, 215, 237, 260 & 283.

PAGE.

Partiality and Treachery among brothers or scandal from friendship towards female sex. 32, 85, 230
Patriotism 205
Perumal Thirumoli 110, 177, 227
Poigai Alwar, The greatness of— ... 245
Rajam and Thangam (A short story) ... 233
Rama and Sitha, Age Limit of— 233
Religious Stories, Preaching of— ... 18, 47, 50
Roofs 94, 127, 132
Sanitation, Hints on— 67, 96, 187, 258
South Indian Railway Company 97
Speech to the heart, A—(A poem) ... 122
State Children, Education of— 189
Step- mother's cruelty, A— 256
Subhashani 15, 52, 80, 165
Suguna Sundaram (An Introduction) ... 3
Suguna Sundaram, Felicitating of—(A poem)... 20
Suttee, The— 117
Teachers' Association, Turaiyur; Proceedings of the— 167
Ten Devotions 114
The Ganges and the Cauvery 251
Thirthapuri 7, 26, 68, 98
Veeramachampatti Subbier, Dharmakarta, Turaiyur Devastanam 159
Vernaculars, The Study of— 266
Wonderful Vision, A— 64
World, Wonders of the— 279

கவனிப்பு.

இந்தப்பத்திரிகை விஷயமாய் வெளியிட்ட நோட்டீசு பிரகாரம் மே மாதத்திற்குள் பத்திரிகையை வெளியிட முயற்சித்தும் இடையில் நேர்ந்த அசம்பவங்களால் காலதாமதப்பட்டது. அதனால் பத்திரிகையை விரைவில் வெளியிட வேணுமென்னும் அவசர நேர்ந்தமையால் அச்சுப்பிழைகள் நன்றாய் பரிசோதிக்கப்படவில்லையாதலால், ஆங்காங்கு காணப்படும் சிற்சில அச்சுப்பிழைகளைத்திருத்தி வாசித்து அக்குற்றத்தைக் குணமாய்க்கொள்ளும்படி பத்திரிகாநேயர்களைக்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உ

சுகுணசுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வாலய 1. 1902௵ மேமீ. நெ. 1

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage	Rs.	3—0—0
Half yearly ,,	,,	1-12—0
Quarterly ,,	,,	0-14—0
Single copy ,,	,,	0—5—0
B[illegible] numbers ,,	,,	0—6—0

[illegible] Subscription 6. S. Per Annum. [illegible]criptions begin with 1st May

[illegible]nt of 8 as. and 4 as. respectiv[illegible] be allowed to regular annual [illegible]lf yearly Subscribers, and a g[illegible]e of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid. A copy will be supplied *gratis* to those who collect not less than 10 Subscribers at a time.

A copy will be sent free to those who contribute articles to the Journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

☞ The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by granting the register number.

Managing Proprietor,
SUGUNA SUNDRAM OFFICE,
T[illegible]

சந்தாவிவரம்.

௵ 1க்கு தபால்கூலிஉள்பட	ரூ.	3—0—
ஆறுமாதத்திற்கு ,,	,,	1-12—
மூன்றுமாதத்திற்கு ,,	,,	0-14-
பிரதி ஒன்றுக்கு ,,	,,	0—5—
பழைய பிரதி ,,	,,	0—6—

இப்பத்திரிகைக்கு மேமீ முத[illegible] சந்தாக்கணக்கு வைக்கப்படும். மே மா[illegible]த்துக்குள் சந்தாத்துகையை முன் பண[illegible]மாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷ[illegible] சந்தாவில் அணா 8ம், ஆறுமாதச்சந்[illegible] வில் அணா 4ம், தள்ளிக்கொடுக்கப்ப[illegible] வருஷந்தோறும் கிரமமாய் சந்தா செ[illegible]த்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவ[illegible]யும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செ[illegible]த்துபவர்களுக்கு ஒரு மாதத்தவணை[illegible] கொடுக்கப்படும். பத்து கையொப்பக்[illegible]ராகளை ஒரேதடவையில் சேர்த்தனுப்பு[illegible]வோர்களுக்கு, மாதந்தோறும் ஒரு புத்த[illegible]கமனுப்பிவரப்படும். விஷயங்களெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனாமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்த பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷய[illegible]ள் தகுந்தபோக்யதை யுடையன[illegible]யிருந்தாலன்றி பிரசுரிக்கப்படம[illegible] விஷயமெழுதிக்கொடுப்பவர் அ[illegible]கள் கையொப்பமும், விலாஸ[illegible]வாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெ[illegible]ய விஷயங்[illegible]

விநாயகர் துதி.

ான்மலேபு லேடெழுத்தாணியொளிர்கிம்புரிப் பூண்மருப்பென்னவொளிெ
ாற்புறுமுடிச்சடைவி யாதமுனிபாரதம் புகலவெழுதாதிபகவன்
மசேர்புழைக்கைவளி கொண்டுமுகிவோர்கள்மக மாற்றவருமவுணர்மாய்
மையுறுமிருகுழைச்செவியசைத்தவர்தீ மடுத்துவலமோங்கமென்கால்
மைபெறவிடுதோன் முகக்கடவுள்சரணமுடி கொண்டுநாளுந்துதிப்பாங்
வை திருவாசகம் வாதவூரையனருள் கொண்டுசொலமதியமரவ
மைபெறுநட்புகொண் டுலவுசடையண்ணரு ளினக்கரத்தினெழுது
மிழணங்கின்மேற் சொற்றபிள்ளைக்கவி நாளுமுலகிற்றழையவே.

கலைமகள் துதி.

சிதம்பரம் பிரமஸ்ரீ பரமேசுவரதீக்ஷதர் அவர்களாலியற்றியது.

சுத்தாதி சுப்ரவஸநா சரதிந்துவக்த்ரா
ப்ரமஹாநநாப்ஜ குஹரேஷு யதாவஸந்தி
வாணீசகாஸ்தி சுமுகீகவிலோக ஹர்ஷம்
குர்யாத்ததாசுகுண சுந்தரபத்திரிகாயாம்.

ம்பகோணம் வராகக்குளத்தெரு வு சதுசாஸ்திர வேதகல்பக வித்ய
சாலை ஸ்ரீமான் ச. யே. மா. சேஷாத்ரியாசாரியார்
அவர்களாலியற்றியது.

மாதேவரக்ஷதிபிதேவஹிதேசியுங்க்தே
தத்வம்ப்ரகாசயதிஸத் குருதுல்யரூபா
பக்திம்சமம்சதநுதேஸததம்ஸகீவத்
லக்ஷிமீரியம் சுகுண சுந்தரபத்ரிகாக்யா.

பாஸ்கரபுரம் ஸ்ரீமான் இராமகிருஷ்ண பட்டாசாரியார்
அவர்களாலியற்றியது.

கஜாகுசகும்பவிஹாரீ
பபிங்மணி சுபாசுரதேஹ:
... வந்தாயி

சுகுணசுந்தரம்.

விஞ்ஞானசிந்தாமணிகாவ்யமாலா
ஸ்ரீப்ரஹ்மவித்யாயுவதீர்விலோச்ய
விவோடுக்ாமோகுணசுஸுந்தரோயம்
ஸமாநதர்மாபுவிசாகசீதி.

இந்த 'சுகுணசுந்தரம்' என்னும் தென்மொழிப் பத்திரிகையாகிய தலைவன், 'விஜ்ஞானசிந்தாமணி,' 'காவ்யமாலா,' 'பிரமவித்தியா' என்னும் பெயர்பெற்ற வடமொழிப்பத்திரிகைகளாகிய மங்கைப்பருவமுள்ள பெண்களை மணந்து, அம்மங்கையர்களோடு இப்பரதகண்டமாகிய அந்தப்புறத்தில் கலவிபுரிந்து, தருமம், பக்தி, ஞானமென்னுங்குழந்தைகளை யீன்று, அக்குழந்தைகளுடன் என்னுட்டினும் புகுந்து, தர்மமின்மை, பக்தியின்மை, ஞானமின்மை யென்னுங்கள்வர், மிருகங்கள், நோய்களாற் பீடிக்கப்படுகின்ற மனிதர்களாகிய குடிகளைப் பாதுகாக்கக் கருதி, அக்கன்னிகாமணிகள் மோஹத்தோடு விரும்பித்தழுவிக்கொள்ளுமாறு கீர்த்தி, ஆசாரம், மானம், கலவியென்னுங்கந்த, புஷ்ப, வஸ்திர, பூஷணங்களையணிந்து, வித்வான்களாகிய ஜனங்களின் மனமென்னுங்கண்களிப்புற, அந்நாவலர்கள் வாய்வீதியில் மாதந்தோறும் வெளிப்பட்டு வருவானாயினன்.

இத்தகைய கோமகனை, நற்குணநற்செயல்களை யணிகலமாய்க்கொண்ட பெரியோர்கள், இவ்வுலகின்கண் நீடூழிநிலைபெற்று நிற்கும்வண்ணம் ஆசிபுரிந்து ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருத்தலின், அதற்கடையாளமாக, இப்பத்திரிகை நிலைபெற்றுவரும்பொருட்டு வேண்டுமுதவிசெய்யும் வண்ணம் கோரப்படுகின்றது.

து. ப. வி.

இரவலர்.

இவ்வுலகத்தில் தற்காலத்தில் இரவலர் என்னுங்கூட்டத்தார்களில் செல்வர், வறியவர், போலித்துறவிகள், துறவிகளென நான்குவகுப்பினருளர். அவர்களுள் துறவிகளொழிந்த மற்றய மூவரும் பிக்ஷை ஏற்றற்குரியாரல்லர்.

"இல்லோரிரப்பது மியல்பே யியல்பே
யிரந்தோர்க்கீவது முடையோர் கடனே."

பிரமஸ்ரீ பரமேசுவர தீக்ஷதர் ...

என்னு நறுந்தொகையில் 'இல்லோர்', 'உடையோர்' என்னு
உயிர்ச்சார்பு பொருட்சார்புகளில் பற்றில்லாதவர்களாகிய துறவிகளை
ப்பற்றுள்ள மற்றவர்களையுமே குறிக்கின்றன. அங்கனமாயினுந்து
ள்ளும் சிலர்,

"ஆவிற்கு நீரென்றிரப்பினு நாவிற்
கிரவினிளி வந்ததில்."

என்னும் திருவாக்கை யுட்கொண்டு ஊழ்வலியால் தமக்குக்கிடைத்தவை
விருப்பும் வெறுப்பு முயற்சியுமின்றிபுசித்துக்காலங்கழிப்பர். சிலதுறவிகள்,

"நறவவிழ்ந்த நறுமலர் தோறும் வண்
டுறவருநதி யிரு லுற் றெடுங்குமா
லறவர் தங்களகந்தொறு மையமுண்
டுறவர் *தங்குகை துன்னுதல் போலவே."

என்ற செய்யுளில் உபமான உபமேயங்சளால் மலர் கசங்காவண்ணம் அதி
லுள்ள தேனைவண்டுகள் பருகுமாறுபோல கொடுப்பவர் முகங்கடுப்பெய்
தாதபடி பிக்ஷையேற்றுக்கொள்வார்கள். இதுநிற்க,

"மழித்தலு நீட்டலும் வேண்டாவுலகம்
பழித்த தொழித்துவிடின்."

என்னுந்திருவாக்கு பயனற்றதாமாறு கூடாவொழுக்கமுடைய போலித்து
றவிகள, தாய் தந்தை முதலிய பெரியோர்களை அனுதரவுசெய்து மனைவி
புத்திரர் முதலியவர்களை யடக்கிக்காவாமலும்,

"எந்நன்றிகொன்றூர்க்குமுய்வுண்டாமுய்வில்லை
செய்நன்றிகொன்றமகற்கு."

என்றவண்ணம் அன்னோர் செய்த நன்றியைக்கொன்றவர்களாய் பற்றற்றவர்
கட்டு, ஏய்ந்த 'துறவி 'என்னு மொழியை 'துரோகி' என்பதின் பரூஉ
மொழிப்பெயராக்கிக்கொண்டு,

"வலியின்னிலமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று."

ன்பதற்குஉதாரணமாய், காஷாயதண்டகமண்டலங்களையும், சுவானுபவ
வர்போன்ற ஒழுக்கத்தினையும், ஞானநூலசளைக்கற்ற வாகருவல்லபத்
ம், கண்ணிகளாகவும், திருமடங்கட்டுதல் கோயிற்திருப்பணி கும்பா

கமாதி தர்மங்களை வலைகளாகவுங்கொண்டு பரதிரவியங்களாகிய பக
யும், பரதாரங்கள் பரபுத்திரர்கள் வேசிகளாகிய மிருகங்களையும் பி
ார்கள். இதுபற்றியன்றே,

"தவமறைந்தல்லவைசெய்தல் புதன்மறைந்து
வேட்டுவன்புட்சிமிழ்த்தற்று."

என நாயனார்கூறினர். சிலபோலிச் சன்னியாசிகள் ஆண்பால் மாணாக்கர்
ட்கு ஞான நூல்களைப்போதிப்பதைப்பார்க்கிலும், பெண்பால்மாணாக்கர்கட்
கே பரிந்து பரிந்து கற்பிக்கப் புகுகின்றார்கள்.

"பகற்சிமடவார் பயிலநோன்பாற்றல்
நெகிழ்ச்சிதருநெஞ்சத்திட்பம்—நெகிழ்ச்சி
பெறும்பூரிக்கின்ற முலைப்பேதாய்ப்பலகா
லெறும்பூரக்கற்குழியுமே."

என்னும்பெரியார் வாக்கையும் கவனியாது, அப்பெண்பாலார்க்கு அன்
னோருபதேசம் புரிதல் 'பெணணென்றால் பேயுமிரங்கும்' என்னும் பழ
மொழியை மேற்கொண்டு காருண்யத்தை வகிக்கின்றனர் போலும்.

அன்றியும், தன்னையடைந்த ஆண்பால் மாணாக்கர்களுக்கு சமயதீ
க்ஷை செய்வதாயிருப்பினும் சீடர்களின் நன்னடக்கையைப்பன்னிரண்டு
வருஷம் வரைச்சோதித்தபின்னர் செய்தல்வேண்டுமென காலவரையறை
கூறுவர் நூலோர் என்றறிவித்து, பெண்பாலாராகிய மாணவிகட்குக் க
டவளவிலேயே, திருக்குறளில், 'குறிப்பறிதல்' என்னுமதிகாரத்துட்கூறிய
இலக்கணங்கள் அன்னோர் பாலுள்ளனவாவென்று பரிசோதித்து, உடனே,
சமயம் வாய்த்தபொழுதே தாமதமின்றி விசேஷ தீக்ஷையை யதிக்கிரமித்த
நிர்வாணதீக்ஷை புரிந்து, தாஸத்வமுடையவராக்குகின்றார்கள். ஆ! இன்
னோர் செய்யுந்தீமை அந்தோ! கொடிது! கொடிது!! 'தாம்கெட்டதுமன்றி
சந்திரபுஷ்கரிணியுங்கூடக்கெடுத்தனா,' என்னுமாறு விவேகமற்றப் பெண்
களையும் சிறுவர்களையுங்கெடுக்கின்றனர்.

திருமடத்திற்கு வரும், 'துறவினரீசநேசத் தொண்டினர்தமக்கு
கல்லூண்,' முதலியவைகளுக்கென்று ஜனங்களை வஞ்சித்து, விளைநிலமாதி
களை யாசகத்தால் விருத்திசெய்து, இராஜபோகத்தையனுபவித்து, திரும
த்திற்குச்சென்றால் சோறுகிடைக்குமென்னும் ஆவலுடன் வருபவர்
கண்டால் தடிதூக்குகின்றனர். இவர்கள் செய்யும தீங்குகள்
துச்சொல்லப்புகின் விரிவுபடுதலாலும்
றமெய்துதலானுமஞ்சி இ

"எவ்வினையரே னுமிணைவிழைச் சொன்றில்லெனிற்
றெவ்வுந்திசைநோக்கிக்கைதொழூஉ—மவ்வினை
காத்தலிலரேலெனைத் துணையராயினுந்
தூர்த்தருந்தூர்ப்பாரலர்."

ன்பதையவர்கள் யூகித்தல்மேண்டும் இத்தகைய கொடியோர்கட்குச் செய
ந்தருமமும், 'இழிந்த மாந்தர்கைப் பொருள்களுமிக பரத்தாசைகழிந்த
யாகியர் கைப்படிற்றூயவாம்,' தருமத்தையுஞ்சமானமாகச் சொல்லலாமா?
ஆலிற்க.

வறியவர்களுக்குள் கற்றவர்கள், கல்லாதவர்கள் எனஇருவகைப்படு
வர். அவர்களுள் கற்றவர்கள் யாசகத்தினால் வயிறுவளர்க்க எண்ணுவதைக்
காட்டிலு மானச்கேடான தொழில் வேறில்லை. அறநூல்களிற் கூறும்
விதி விலக்குகளெல்லாம் கற்றவர்கட்கே பயன் படத்தக்கனவென்பதை,

"கற்கக்கசடறக்கற்கக்கற்றபி
நிற்கவதற்குத்தக,

என்னுந்திருக்குறள் உபதேசிக்கின்றது. சற்றவர்களே அவ்விதி விலக்குக
ளைக்கவனியாவிடின், மற்றயகல்லாத மிருகப்பிராயர்களோ அறிந்து நடத்தற்
குரியர்? அறநூல்களில், 'ஏற்பதிகழ்சி,' 'இரப்பவன் புவிமீதிலீனன்,'
"பிச்சைபுகினும்," "நல்லாரெனினுங்கொளறீது," எனவும்,

"நொய்தாந்திரணத்தி னொய்தாகும் வெண்பஞ்சு"

என்னுநீதிவெண்பாவில், இலவம்பஞ்சினும் லேசானவர்கள் என்றும்,

"கல்லாவறிவிற்கயவற் பாற்கற்றுணர்ந்த
நல்லார்தமதுகனநண்ணுரே—வில்லார்
கணையிற்பொலியுங் கருங்கண்ணாய்நொய்தாம்
புணையிற்புகுமொண் பொருள்."

என்று நன்னெறியினுமொரேபடித்தாக இரத்தலை நிஷேதித்துக் கூறப்படுகி
ன்றது.

"கற்றவறிவினரைக்கா முறுவர்மேன்மக்கள்
மற்றயர்தாமென்றுமதியாரே—வெற்றிநெடு
... வேண்டும்வாள்விழியாய் வேண்டாபுளிங்காடி
...டும் வாழைப்பழம்."

...பாவத்தைப்பெறுமல் மூடர்பாற்செ

"மயிர்நீப்பின்வாழாக்கவரியாவன்ன
ருயிர்நீப்பர்மானம்வரின்."
"மானம்பட வரின் வாழாமை முன்னினிதே,"

எனவும்,

"பிச்சைக்குழூத்த குடிவாழ்க்கைப்பேசுங்கா
லிச்சைபலசொல்லியெடுத்துண்கை—சிச்சீ
வயிறுவளர்க்கைககு மானமழியா
துயிர்விடுகைசாலவுறும்."

எனவுங்கூறுதலால், இரத்தலினுமிறத்தலே சிறந்ததாம்.

இன்னும் வரும்.

தீர்த்தபுரி.

இந்நகரம் தமிழில் துறையூர் என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. தீர்த்தமெனினுந் துறையெனினும் ஜலத்தைக்குறிக்கின்றமையால் நீர் வளத்தால் சிறந்த நகரமென அதற்குப்பொருள் போதருகின்றது. அந் நீர்வளமுள்ளதாகவே நிலவளமும், அதினின்றுஞ் சகல செல்வங்களுமிகுதியும் பொலிந்திருத்தலால், சாதுக்களுக்கு வாஸ யோக்கியமான நகரமென்று ஊகிக்கப்படுகின்றது.

பெரியோர்களிந்தஸ்தலத்தைப்பூர்வத்தில் தண்டகாரணியத்தின் ஓர்பகுதி என்று சொல்லுகிறார்கள். இந்நகரத்தைச்சூழ்ந்த பிரதேசங்களில், பத்திர புஷ்ப பலாதிகளால் நிறைந்துள்ள சோலைகளும், ஏரிகள் குளங்கள் ஓடைகள் முதலிய நீர்நிலைகளும், சிறு குன்றுகளும், பள்ளத்தாக்குகளும், மலைத்தொடர்களும், அவற்றில் பெரிய மனோக்யமான குகைகளும், துஷ்ட ஜந்துக்கள் வசிக்குமடர்ந்த அடவிகளும், இரமணீயமான ஆசிரமங்களுமுள.

இத்தலத்திற்கு வாயவியத்தில் 'சதுரகிரி' என்கிற கொல்லிமலையும், ஈசான்யத்தில் 'ஹரிதாசலம்' என்கிற பச்சமலையுந்தான் பிரசித்திபெற்றதாயும், கோடைகாலத்தினும் இடையறாது ஓடுகின்றஅருவிகளையுடையதாயும், பலவித கனிவர்க்கங்களும், தானியவர்க்கங்களும், மிளகு, வெந்தயம், கடுகு முதலிய சம்பாரவர்க்கங்களும், பச்சிலை மூலிகைகளும், காப்பிக்கொட்டை முதலான தீவாந்தரச்சரக்குகளு மேராளமாயுண்டாகின்ற ஸ்தானமாயுமிருக்கின்றன.

அம்மலைகளில் மலையாளிகளென்று நாகரீகமற்ற ஓர்வகைச்சாதியார் வசிக்கின்றார்கள். அவர்களில் ஆண்பாலாரில் பெரும்பான்மையோர் அரை

யில் கௌபீனத்தை யுடுத்திக்கொண்டு, அழுக்கடைந்த துப்பட்டியை அகோராத்திரமாக போர்த்திக்கொண்டு, புகைச்சுருட்டுகளிடையறாது பிடிப்பதற்காக இடுப்பைச்சுற்றிலுமரைஞாண் கயற்றில் செருகிக்கொண்டிருப்பார்கள். பெண்பாலாரும் இரட்டுப்போன்ற கெட்டியான வெள்ளைப்புடவையை உத்தரீயமிட்டுக்கொள்ளாமல் கைம்மூலத்திலிருந்து ஒரேவளைப்பாகவளைத்துச்சுற்றிக்கட்டிக்கொண்டு, அதில் புகைச்சுருட்டுகளை செருகிக்கொண்டிருப்பார்கள். விவாகமில்லாத ருதுவாகாத சிறுபெண்களுக்கடையாளமாக, தென்கலை சோழியப்பிராமணர்களைப்போல, முன்குடுமி வைத்து க்ஷவரஞ் செய்துகொண்டிருப்பாகள். அப்பெண்களை 'சீந்தாக்குமரி' என்று சொல்வார்கள். அத்தகைய மலையாளிகள், வேட்டையாடுதல், விவசாயஞ் செய்தலிவைகளைத் தொழிலாகக் சொண்டவர்கள். அம்மலையாளிகளுக்குள் 'துரை' என்பதாய் எஜமானனொருவனை எற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவ்வெஜமானனை தெய்வம்போலக் கருதி, தெய்வத்திற்கு நாம் செய்துவரும்வணக்க முதலிய உபசாரங்களை, அவர்களுமவனுக்குச்செய்துவருகின்றார்கள். அந்தச்சாதியாருக்குள் குற்றஞ்செய்பவர்களுக்கு, அவ்வெஜமானனே அபராத முதலிய சிக்ஷை விதிக்கிறதுண்டு.

இவ்விருமலைகளில், 'சதுரகிரி' என்ற கொல்லிமலையில் பூர்வத்தில், அகத்தியமாமுனிவர், பரமசிவ மூர்த்தியின் ஆநந்தத்தாண்டவத்தைக்கோரித்தவஞ்செய்ய, பகவான் முனிவர் திருவுள்ளங்களிக்க நர்த்தனஞ்செய்யுங்கால், ஈசனது சிரசிற்றாங்கிய சடாபாரத்திலுள்ள கங்காதேவியானவள் பொங்கித்ததும்பி ஐந்து முகமாய் பூமியில் வழிந்தோட, அந்நதியானது, 'பஞ்சநதி' 'அய்யாறு' என்றுபெயர்கொண்டு அமமலையின் சிகரத்தினின்று மிறங்கி யோடி வாய்த்தலையென்ற யிடத்தில் காவேறியாற்றில் சங்கமமாகிககடலிற் போய் விழுகிறது. இவ்வாற்றின் உத்பத்திஸ்தானமாகிய அம்மலையினுச்சியில், இப்பொழுது மெங்கோயிருந்து இரண்டுபனை யுயரத்தினின்றும் ஜலம்பெருகி, ஆகாசகங்கையோ என்னுமாப்போல் கீழே விழுந்தோடுவதைக்காணலாம்; அம்மலையினுச்சியில் ஓடுகின்ற அந்நதிக்கரையில், பரமசிவனது 'சத்யோஜாதம்' என்னுமுகத்தினம்சமான தர்ம கோசேசுவரர் அல்லது அறப்பள்ளீசுவரர் என்று வழங்குகிற பிரசித்தியான சிவஸ்தலமுளது; அதற்கருகில் வருகிற அந்நதியை 'மீன்பிள்ளைத்துறை' என்று வழங்குகிறார்கள். அத்துறையில் வெண்மையான மூன்றுவரிகளை முதுகிலுடைய ஒரு முழ நீளமும், அதற்குத்தகுந்த பருமனுமுள்ள மீன்கள் வசிக்கின்றன. அந்தக்ஷேத்திரத்திற்கு இப்பொழுதும் ஜனங்கள் வருஷந்தோறும் ஆடிப்பதினெட்டன்று போய், அக்கெங்கையில் நீராடி, அங்காவிர்ப்பவித்திருக்கும் ஈசுவரனைத்தரிசித்து வருகிறார்கள். பிரார்த்தனைக்காரர்கள் அந்த மீன்களு

க்கு மூக்குக்குத்தித் தின்பண்டங்களைப்போடுவார்கள்; அவைகட்குத்தினந் தோறும் கோவிலிலிருந்தும் பிரசாதங்கொண்டுவந்து போடுவது வழக்கம். பூர்வகாலத்தில் யாரோ ஒருவன் அம்மீன்களிற் சிலவற்றைப்பிடித்து, ஒவ்வொன்றையுமும்மூன்று துண்டங்களாயறுத்துக்கறி சமைத்துக்கொண்டிருக்கையில், அத்துண்டங்களொன்றுசேர்ந்து பழயபடி மீன்களாகித்துள்ளி அந்நதியில் குதித்துவிட்டமையால், அவைகட்கு முதுகில் மூன்று கோடுகளுண்டாயினவென்று சொல்லுகிறார்கள். அத்தகைய மீன்கள் வேறெங்குங்கிடையா. அறுத்தமீன் பொருத்துவிக்கும் அறப்பள்ளீசுவரர் எனமூர்த்தியின் மான்மியத்தைச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அம்மலையைச்சேர்ந்த பிரதேசங்களை சுக்கிரிவருடைய 'மதுவனம்' என்றும் க்யாதியாய்ச்சொல்லுவார்கள். அம்மலையடிவாரத்திற்கு மூன்று நாழிகை வழிதூரத்தில் அவ்வய்யாற்றில் சங்கமமாகிற *தளிகையாற்றின் கரையில் 'வாமதேவம்' முகத்தினம்சமான கொப்பமாபுரி என்ற சிவஸ்தலமும், பிறகு இரண்டு யோசனை தூரத்தில் 'அகோரம்' முகத்தினம் சமான திருத்தலையூர் என்ற க்ஷேத்திரமும், அதற்குக்கொஞ்சதூரத்தில் 'ஈசானியம்' முகத்தினம்சமான தின்னக்கோணம் என்ற க்ஷேத்திரமும், கடைசியாக காவேரிதீரத்தில் வாய்த்தலையென்றவிடத்தில் 'தத்புருஷம்' முகத்தினம் சமான பாதாளேசுவர சன்னிதானமும் ஆக இவ்வைந்து திவ்வியக்ஷேத்திரங்களும் பஞ்சநதி என்ற அய்யாற்றுக்குச்சமீபமாயிருக்கின்றன.

இத்தகைய மகிமைதங்கிய அய்யாற்றின் கீழ்பால் ஐந்துமயில்தூரத்தில் மேற்சொல்லிய துறையூர் அல்லது தீர்த்தபுரி என்னு மிந்நகரமிருக்கின்றது. இதில், நந்திகேசுவரசுவாமிகோயில், காசிவிசுவநாதசுவாமிகோயில் கெங்காராமன் கோயிலென்னும் விசுவநாதசுவாமிகோயில், வேணுகோபால, சுவாமிகோயில், மலைபிரஸன்ன வெங்கடாசலபதிசுவாமிகோயில், பெரியஏரி, எந்நகரத்திலுமில்லாத சிறந்த கருங்கல்வேலைப்பாடுள்ள இரண்டு திருக்குளங்கள், அன்னசத்திரம், ஜமீந்தார் அரண்மனை, வீரசைவமதஸ்தாபகராகிய சிவ பிரகாச சுவாமிகள் பெரியமடம் இவைகளிருக்கின்றன. இவைகளைச்சு...த கோட்டைவீதிஎன்னுந்தேரோடும் வீதிகளில் பிராமணர்கள் வசிக்கின்...கள்.

---

* பூர்வத்தில் ஸ்ரீ இராமபிரான் தண்டகாரணியத்தில் வசிக்குங்காலையில் ...கசமைப்பதற்காகத்தன்பானத்தால் இந்நதியைஉற்பத்திசெய்தமையால்தளி... ...னச்சொல்வார்கள்: தளிகைசெய்தயிடத்தை இப்போதும் தளிகை கிரா... ...று வழங்கி வருகிறார்கள்.

மேலே சொல்லிய நந்தி கேசுவரசுவாமிகோயில், வேணுகோபால சுவாமிகோயில் இவ்விரண்டு மிவ்வூரை பிரதிஷ்டை பண்ணினகாலத்திலே யே கட்டப்பட்ட புராதனஸ்தலங்கள். அக்கோயில்களை திரிபுவன சக்கிர வர்த்தி என்னுமோர் அரசனால் கட்டப்பட்டதாக சிலாசாஸனங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

இவ்வூரில் சற்றேறக்குறைய முன்னூருவருஷங்களுக்குமுன் அரசு புரிந்த ஜமீந்தார்காலத்தில், அவருடைய சகோதரர் ஒருவர் தமையனுர்க்கு சாதகமாயிருந்து சகல விசாரணைகளையு நடத்திக்கொண்டு வந்தனர். அக்கா லத்தில் மேலேசொல்லிய திருக்குளங்களிரண்டில் பெரிய தெப்பக்குளத்தை அளவிறந்த திரவியங்களை வாரிச்செலவிட்டு,எங்குமில்லாத சிறந்த வேலைப்பா டுகளோடு, நாற்புறத்தினும் படித்துறைகளும், கருங்கற்கைப்பிடிச்சுவர்க ளும், விஸ்தீரணமான ஆளோடிகளும், மேற்படி சுவர்களில் கோயிலில் நக்ஷத்திரதீபங்கொளுத்தினதுபோல் தெப்போச்சவகாலங்களில் தீபங்களி னல் பிரகாசிக்கத்தகுந்த மாடங்களும், எந்தப்புறநோக்கிலுஞ் சமமான நீர் மட்டத்தினளவைகளுடன் பார்ப்பவர்களுடைய கண்களுக்கு சந்திரனைப் போல ஆக்லாதத்தை யுண்டுபண்ணக்கூடியதாய் வெகு விசித்தரமாய்க் கட்டிமுடித்தனர். சிலநாள் சென்றபின், தமயனுகிய ஜமீந்தார் இச்சங்கதியை அறிந்து, பொக்கிஷத்திலிருந்த அளவிறந்த திரவியங்களை நஷ்டப்படுத்திய தற்காகவும், தன்னனுமதியின்றி திருக்குளமமைத்ததற்காகவும், மிகுந்த கோபமுடையவராய், கொலையாளிகளை வரவழைத்து நமது திரவியத்திற்கு நஷ்ட முண்டு பண்ணின இப்பரம துஷ்டனை சிரச்சேதம் பண்ணிவாருங் கள்”என்று ஆக்ஞாபித்தனர். உடனே கொலைக்களத்துக்குப் போகும்பொ ருட்டு கொலையாளிகளுடன் சின்னஜமீந்தார் புறப்பட்டு வெளியில் வரும் பொழுது,

“ நெருநலுளனெருவனின் றில்லையென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு.”

எனக்கூறியிருப்பதால், நாம் என்றிருந்தாலும் ஓர் நாள் மரணம டைய வேண்டியதாதலின், அந்நாளின்றைக்கே நமக்கு வாய்த்திருப்பத அதற்காக நாம் துக்கிக்க நியாயமில்லை; நமக்குப்புகழுடம்பாக விருக்கி இத்திருக்குளம் ஒன்றுமழியாமலிருப்பின், அதுவே நாம் ஜீவித்திருப் குச்சமானம்.” என்றக்குளமழியாமலிருக்குமாறு தமக்குள்ளே யாலோ கடவுளை பிரார்த்தித்துக்கொண்டே சென்றார். அப்பொழுது பிர ிலிய மற்றயகாரியஸ்தர்கள் தமக்கு எஜமானனுயிருந்த அம்மந்திரிய ன்று,

" அகலாத ணுகாது தீக்காய்வார்போல்க
விகல்வேந்தர் ச்சேர்ந்தொழுகுவார்."

என, அமைச்சியலில் கூறியிருத்தலால், அரசனை நெருப்புக்குச் சமானமென்பது இவ்விராஜனுக்கே தகும் என்று கிலேசித்தார்கள். அப்போ தவர்களைப்பார்த்து அம்மந்திரியார் சொல்லுவதாவது :— "எனது பிரியமுள்ள நண்பர்காள்! இவ்வித உபசார வார்த்தைகளினால் எனக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை. ஆனால் நீங்கள் எல்லோரும் எனக்கோருபகாரஞ் செய்யவேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அஃதென்னையெனில், நமதரசனொருவேளை யென்னாற்கட்டப்பட்ட திருக்குளத்தை, என் மீதுள்ள கோபத்தினாலிடித்து விடும்படி யுங்களுக்குக் கட்டளையிட்டால் அதனை எந்த உபாயத்தினாலாவது கெடுதிவராமற் பாதுகாப்பதுதான்.' என்று வந்தனத்துடன் கேட்டுக்கொண்டார். அம்மொழிகளைக்கேட்ட காரியஸ்தர்கள் தங்களெஜமானன் பிரிவாற்றாமையால்மனமவருந்திக்கண்ணீர்விட்டுக்கொண்டு நின்றார்கள். அதனைக்கண்ட கொலையாளிகள், இத்தகைய புண்ணியபுருஷனை நாம் எவ்வண்ணம் சிரச்சேதம் பண்ணுவது என்னுமிரக்கத்தினால் "சுவாமி! தாங்களெங்காயினும் தேசாந்திரம் போய்விடுங்கள், நாங்களரசனிடஞ்சென்று கொலைசெய்துவிட்டதாக தெரியப்படுத்திவிடுகிறோம்" என்றார்கள். காரியஸ்தர்களும் அதற்கிசைந்து சில திரவியங்களைச்சேகரித்து மந்திரியாரிடங் கொடுத்தனுப்பிவிட்டார்கள். பிறகு யதாப்பிரகாரமரண்மனையில் அரசன்ஆஜ்ஞையின்படி தங்கள் தங்கள்வேலைகளைப்பார்த்து வந்தார்கள். கொலையாளிகள் இராஜனிடஞ்சென்று தங்களுத்திரவின்படி மந்திரியாரைக்கொலை செய்து விட்டனமென அறிவித்தாரகள்.

இங்கனமிப்படியிருக்க தேசாந்தரஞ்சென்ற வமைச்சன் அநேக பிரதேசங்களை யெல்லாஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டு காசிக்ஷேத்திரத்தையடைந்து, சிலநாளங்கு வசித்திருந்து, சாளிக்கிராமம், பாணலிங்கம், கங்கை யிவைகளை காவடிகட்டி எடுத்துக்கொண்டு இராமேசுவர யாத்திரைககாக திரும்பி வரும்பொழுது புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம பண்ணியும், புண்ணியஸ்தலங்களை தரிசித்தும், கடைசியாக திருவண்ணாமலைக்குவந்து சிவப்பிரகாச் சுவாமிகள் திருமடத்திலிறங்கி, சுவாமிகளிடம் ஞானசாஸ்திர விசாரணை பண்ணிக்கொண்டு, சிவலிங்கதாரண தீக்ஷை, பஞ்சாக்ஷர உபதேசமுதலிய சைவசின்னங்களைத்தாங்கி சிலநாள் வசித்துக்கொண்டிருந்தனர். இதற்குள் ஐந்தாறு வருஷங்கள் கழிந்தனவாயினும், துறையூரில் காரியஸ்தர்களிடமிருந்து இரகசியமாய்க்கடிதப்போக்குவரத்துகள் நடந்துகொண்டிருந்தன. அக்காலத்தில், துறையூரில் அரசுபுரிந்து கொண்டிருந்த பாளையகா

ரர், முதுமைப்பருவத்தை யடைந்தவராய், இராஜ்ஜிய பட்டாபிஷேகத்திற்குச்சந்ததியில்லாமையினல், தமது சமஸ்தானத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள் யாவரையும் வரவழைத்துச் சபாமண்டபத்தில் இருந்து ஆலோசிக்கத்தொடங்கி, உத்தியோகஸ்தர்களைப்பார்த்து, "எனக்கோ அந்தியகாலம் சமீபித்துவிட்டது; இவ்வரசாட்சிக்குரிய புத்திரப்பேறும் எனக்கில்லாமற்போயிற்று; தர்மிஷ்டனும், புத்திசாலியும், கிளைத்ததை முடிக்கும சாமர்த்திய புருஷனும், எனதருமைக்கண்மணியுமாகிய என் சகோதரனைக்கொன்ற மசாபாதகனுனேனே; என்சகோதரனிப்பொழுதிருந்தால் நானிவ்வளவு கிலேசத்தையடையவேண்டியதில்லையே; அளவுபடாதமகதைசுவரியத்தை வேறெவனுக்கொப்படைப்பேன்;" என்றேங்கிசகோதரனை நினைத்துகொண்டு சோகத்தினுல் மூர்ச்சித்தான். அருகிலிருந்த காரியஸ்தர்கள் அவ்வரசனை சோகத்திலிருந்து தெளிவித்து, "தாங்கள் வருத்தப்படவேண்டியதில்லை; தங்கள் சகோதரனுயிருடனிருக்கிறர்; அனுமதி கொடுத்தால் ஐந்தாறு தினத்திற்குள் வரவழைக்கிறேம்" என்று முன்னிகழ்ந்த சமாசாரத்தையுஞ்சொன்னர்கள். அந்த வார்த்தயைக்கேட்ட அரசன் அத்தியாச்சிரியமடைந்து "அப்படியானுல் சீக்கிரம் தருவித்து கொடுப்பீரேல் நீங்கள் செய்தநன்றியை எப்பொழுது மறக்கமாட்டேன்; என் அன்புள்ள சகோதரனை என் கண்குளிரக்கண்டு, அவனது இனிமையான வார்த்தைகளை என் காது குளிரக்கேட்டு, அவனுடன் சல்லாபயாக இருந்து, நான் *செத்தால் எனக்குக் கதியுண்டு; இல்லாதபக்ஷத்தில், இராஜ சுகத்திலிருந்த நான், சகோதர துரோகியாய் நரகத்தையடைந்து வருந்துவேன்; நீங்களென்னிடம் சம்பளம் பெற்று ஜீவிப்பவர்களாயினும், அறிவு தர்மசிந்தை. ஜீவகாருண்ய முதலிய நற்குணங்களை யுடையவர்களாயிருப்பதால், எனக்கு உங்களைவிட ஆப்தமான சிநேகிதர்கள் ஒருவருமில்லை; என் மனவருத்தத்தைப்போக்கி என்னை நற்கதியடையும்படி செய்வதுங்கள்பாரம்;

'உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டா
முடன் பிறந்தே கொல்லுல் வியாதி—யுடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கு
மம்மருந்து போல்வாருமுண்டு."

என்றபடி: என் துணைவனுக்கு, நான் உடன்பிறந்தவனுயிருந்தும், வியாதியைப்போல, அவனைக்கொல்லுவதற்கு துணிவுற்றவனுனேன்; உங்களுக்குமவனுக்கும் யாதொருசம்மந்தமுமில்லாதிருந்தும், இராஜ சகோதரனைக்கொ

---

* அரசன் தன்நீனத்வத்தை வெளிப்படுத்தும்பொருட்டு, "செத்தால்" என அமங்களமான வார்த்தையாய்ச்சொன்னன்

ல்லாகாதென்னுஞ்சருத்தினால், அவனையிதுகாறும் எனக்குத்தெரியாமல் ஒளித்து வைத்து சம்ரக்ஷித்துக்கொண்டு வந்தீர்கள்; நீங்கள் இராஜதுரோகமற்ற சத்புருஷர்களாக எனக்குக்கிடைத்தது நான் செய்த தவப்பயன்;" என்றவர்களைப்புகழ்ந்து கொண்டாடினான், பின்னர், அவ்வுத்தியோகஸ்தர்கள்,

செங்கதிரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற்பார்த்தனையும் பாராதே—விஞ்சும்
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

எனப்பெரியோர்கள் கூறியிருப்பதால், பூர்வகாலத்திலும் உங்களைப்போல் சகோதர விரோதங்கள் உண்டாயிருந்தன. அரசர்கள் செல்வக்களிப் பென்னுஞ்சமுத்திரத்தில் மூழ்கிக்கிடப்பதால், அவர்களுக்கு அறிவென்னுந் தீபம் பிரகாசிக்கிறதில்லை.

"களித்தானைக் காரணங்காட்டுதல் கீழ்நீர்
குளித்தானை தீத்துரீ இயற்று."

என்பதனால், அவர்கட்குத்தகுந்த புத்திமதிகளை எடுத்துச்சொல்லி சன்மார்க்கத்தில் நடத்துவதற்கு எப்படிப்பட்ட புத்திமான்களாலுஞ்சாத்தியப்படுகிறதில்லை. இதற்கு திருஷ்டாந்தம்:—

"பூபதிகாத்ம புத்திமதி புட்டனி சோடப்ரதானுலந்தப்ர
ஞ்ஞாபரிபூர்ணு லைகொனஸாகதுகார்ய முகார்யுதக்ஷுலை
யோபினதுரோண பீஷ்மக்ருபயோதவரேண்யுலு கௌரவேந்த்ருகிஞ்
சேகொனியேமிகில்கடலு ஜேயக மோபிரி முன்னுபாஸ்கர."

என்னுமாந்திர பத்தியத்தில், பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமர், விதுரர் முதலிய புத்திமான்கள் சமீபத்திலிருந்து அடிக்கடி சன்மார்க்கங்களைப்போதித்தும், 'கெடுமதிகண்ணுக்குத் தோன்றாது' என்னும்பழமொழிப்படி துரியோதனமகாராஜன் தன்னுடைய துஷ்டபுத்தியினால் தான்பிடித்ததையே குரங்குப்பிடியாகப்பிடித்துக்கொண்டு கடைசியாகத்தன்னைச்சேர்ந்தவர்களுடன் மரணத்தையடைந்தான். பிராதாக்களுக்கிடங் கொடாமல் இருந்தமையால் துரியோதனன் சாகுங்காலத்தில் எனனவாரிக்கொண்டுபோனான்? சகோதரர்களிடத்திலேயே இராஜ்ஜியங்களை யெல்லாமொப்பித்துவிட்டு அதோகதியை அடைந்தான். தெய்வத்துக்கு தமையன்தான் பிரீதியுடையவனென்றும், தம்பி பிரீதியில்லாதவனென்றும் இல்லை. தமையன் தம்பிகளிருவரையும் தெய்வமே சிருஷ்டித்திருப்பதால், அவ்விருவர்களிலெவனிட மக்கிரமமிருக்கிறதோ அவனை அந்தத்தெய்வமே சிக்ஷித்து விடுகிறது.

மனிதனானவன் தன்னிரண்டு கண்களைக்கொண்டு வஸ்துக்களின் நன்மை தீமைகளையறிவதுபோல், அரசனானவன் பாரம்பரியமாயிருந்துவருகிற மந்திரியைக்கொண்டே இராஜகாரியங்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து செய்யவேண்டியது. யானையானது மதங்கொண்டு துர்மார்க்கத்தில் பிரவேசித்தால் அதை அங்குசத்தால குத்தித்திருப்பி நல்வழியில் சேர்ப்பதற்கு பாகர்களுக்கு ஸ்வதந்திரமிருப்பதுபோல், அரசர்களுக்கு மமதையினால் புத்திமாறி உசிதமில்லாத காரியங்களில் பிரவேசித்தால் கடின வார்த்தைகளால் கண்டித்துப்புத்திசொல்லி சன்மார்க்கத்தில் அவ்வரசர்களைத்திருப்புவதற்கு மந்திரிகளுக்கு சுவதந்திரமுண்டு. அரசர்களுக்கு நாசகாலம் சமீபித்தால்தான் பழமையாகவிருக்கின்ற காரியஸ்தர்களிடத்தில் அவநம்பிக்கையுண்டாகும் அரசன் தன்பால் பரிசாரகர்கள் முதலிய ஊழியக்காரர்களும், கீதவாத்தியங்கள் செய்து பரிசுபெற்று ஜீவிக்கின்றவர்களுமிருப்பினும், அவர்களிடத்தில் அவரவர்கட்குரிய வேலைகளை வாங்கிவரவேண்டுவதேயொழிய அவர்களை உயர்ந்த மந்திராலோசனை முதலிய காரியங்கட்குரியவர்களாகச் செய்தல் கூடாது: ஏனெனில், அவர்கள், அற்பசம்பளத்தினாலும். யாசகத்தாலும் ஜீவிப்பவர்களாதலால் லஞ்சமுதலிய திரவியாபேக்ஷையினால் சமையத்தில் அரசர்கட்குத் தீமையான காரிவங்களைச்செய்யத்துணிவார்கள். இந்தச்சமஸ்தானத்து முதன்மந்திரியாகிய தங்கள் சகோதரர் சகலதர்கங்களையுமறிந்தவர்; ஈசுவர பக்தியுள்ளவர்; தான் சுகத்தையடைவதுபோல சகல ஜனங்களும் சுகத்தையடையவதிலதிக பிரீதியுடையவர்; ஆதலால் அவர் அபரிமிதமான திரவியங்களைச்செலவிட்டு திருக்குளத்தைக்கட்டி முடித்து, தன்பேரையும், உமதுபேரையும் இவ்வுலகமுள்ளளவும் நிலைபெறச்செய்தனர். அல்லாமலும், சர்வஜனங்களும் ஜலசௌக்கியத்தினால் நன்மைபெற்று சுகிக்கும்படி செய்திருக்கின்றனர் அத்தகைய புண்ணியசீலர் இந்நாட்டை அரசுபுரியும்பக்ஷத்தில், சகல ஜனங்களுக்கும் பிதாவைப்போலிருந்து நன்மையைச்செய்வார் என்பதில் எள்ளளவேனுஞ்சந்தேகமில்லை. தங்களுத்திரவின்படி அவரை வரவழைக்கிறோமென்று, அரசனிடம் விடைபெற்றுச்சென்று, இங்ஙனநிகழ்ந்த சங்கதிகள் முழுதும் கடிதத்தில் வரைந்து, ஓர் தூதுவனிடங்கொடுத்து, திருவண்ணாமலையிலிருந்த லிங்காரெட்டியார் துரைவர்கர்களாகிய இச்சமஸ்தான அமைச்சருக்கு அக்கடிதத்தைக்கொடுத்தழைத்துவரும்படி அனுப்பினார்கள்.

இன்னும் வரும்.

கடவுள் துணை.

சுபாஷணி.

I

சோதமன்வருதல்.

வடநாட்டின்கண் சோணையாறு சூழ்ந்த பிரதேயத்தி லெந்நகரத்தினுஞ்சிறந்த நன்னகரொன்று சத்யபுரி என்றுளது. அது மலை, காடு, அகழி, மதில் என்னு நால்வகை யரண்களாலுஞ் சூழ்ந்ததும் பச்சிலைகட்கிடையிடையே நறுமலர் பொதுளி, யின்னறுந்துளியினோடு மகரந்த மிறைக்கின்ற பூஞ்சோலைகளையுடையதும், ஆகாயத்திலுள்ள யிடபராசி மேய்ந்துவிடுமெனக்கருதி நெற்பயிர்கள் நிமிர்ந்து நில்லாவண்ண மள்ளர்கள் காலினால் மிதித்துச் சாயப்பண்ணுகின்ற வளமிகுந்த செந்நெற்காடுகள் பரந்துள்ளதும்,

இந்நகர்ப்பொலிவினைக் காட்டலின்றியப்
பொந்நகர்ப்பொலிவினைப் பொருந்தக்காட்டுவ
தென்னெனமுனிகுவரெனப் பயந்துகொல்
பின்னுறுதிரைதடம் பெரிதுயவீசுதல்,

என்னும்படி அன்னம், நாரை, குரண்ட முதலிய நீர்ப்பறவைகளொலிக்கப் பெற்று அன்றலர்ந்தமுளரிப் பூக்களில் பெண்வண்டுகளுடன் ரீங்காரம் பண்ணிக்கொண்டு விளையாட்டயர்கின்ற சுரும்பினங்களாற் பொலிவுபெற்று அழகுவாய்ந்த பொய்கைகளையுடையதுமாய், மங்கையர்கள் பயில்வதனால், அவர்கள் திமிர்ந்த பொற்சுண்ணங்களும் மலர்த்தாதுகளும், சிந்திய

படியினிற்பாய் பரிபடர்தலாலெழு
பொடிமிசையுலகினைப் போர்த்தல் செய்தலாற்
கொடிநெடுமாடமீக் குலவுபொன்னொளி
படிதலாற் பொன்னகரென்னும் பான்மையே,

என்னப்படுவதாய் அந்தணர்கண் முதலிய வருணஸ்தர்கள் வசிக்கின்ற தெருக்களும், கடைவீதிகளில் அறப்புறம், நறுநீர்ப்பந்தல், கல்விச்சாலை, ஆடரங்கு, படைபயிற்றுமிடம், யானைக்கூடம், குதிரைலாய முதலியவைகளும், தேவர்கோயிலுக்குட் புகுவோர் தேவலோகத்தினு மெய்துவார் என்னும்படி ஆகாயத்தையளாவிய நவமணிகளாலியன்ற கோபுரம் விமானம் திருமதின் முதலியவைகளாற் பொலிவுபெற்று விளங்குகின்ற திருக்கோயில்களையுமுடையதாயிதனினுஞ் சிறந்த நகர் பிறிதில்லை யென்னும்படி விளங்குகின்றமையாற்றான்,

செம்மலர்மிசையுறு திசைமுகத்தவன்
மைம்மலிகுழலியை வகுத்தபின்னவண்
மெய்ம்மலியழகினை விரும்பினுலென
வம்மலியங்நகர் யடையவெண்ணுவான்.

அனையதேல், இந்திரன் முதலிய ஏனைய தேவர்கள தாங்கள் சுகவாஸம் பண்ணுதற்குறிய தங்கள் நந்தனவனத்து நறுமணம் விராய மென்னிழற் பரப்பில் தீம்புனலோடை சூழ்ந்த சந்திரகாந்தக் கல்லானமைந்த மண்டபங்களை நினைதலின்றி, இதன்கண் விருப்புற்றுறைகின்றனரென்பது புதுமையாமோ! அன்றியும்,

விருந்தினர் தேலரான்றிமேதகு மங்கர்க்குப்
பொருந்துநர்பிறரின்றென்னும் புணர்ப்புறுகுறைவேயன்றி
யருந்துநர்க்கமுது பொற்பூணணிதருவார்க்குடுக்க
விரும்பினர்க்காடைமற்று மிளிர்பொருட்களவையின்றே.

இவ்வாறு சிறப்புற்ற அங்நகரத்தில் அழகு, அறிவு, கல்வி, செல்வம், அடக்கம், பொறுமை முதலிய நற்குணங்களோடு செங்கோல் செலுத்துகின்ற உலகப்பிரியன் என்னுமரசனது சபையில் ஓர் நாள் கௌதமமுநிவர் எழுந்தருளலும், அவ்வரசன் எதிர் கொண்டழைத்து வந்து ஓர் நவமணித்தவசிவிருத்தி யுபசரித்து வணங்கி நிற்றலும், அம்முநிவர் அரசனையும் பீடத்திலிருக்க வுத்தரவளித்து அவ்வரசனது க்ஷேமாதிகளை விசாரித்ததின் பின், அவ்வரசன், 'சுவாமி!' தேவரீரிங்கன மெழுந்தருளியதற்குக் காரணமென்னை? தங்கள் ஆசிரமத்தில் உள்ள பொருள்கள் துஷ்டர்களாலபகரிக்கப் பட்டனவா? அல்லது தாங்களியற்றும் ஹோமாதிகள் அசுரர்களாற்றடுக்கப்பட்டனவா? அல்லது யாகத்திற்கு வேண்டிய வுபகரணங்களைக் குறித்தோ—? அடியேன் யாது பணிவிடை செய்தல்வேண்டும்? திருவாய் மலர்ந்தருள்வீர்களாக' வெனலும், அம்முனிவர் அரசனை நோக்கி, 'அரச!

சற்றுநேமியிற்பொலியுலகினையுறு சுடர்த்தே
ரொற்றையாழி சூழ்ந்தென மணிமுடியுடையொன்ருர்
சுற்றமோடறப் பொருகினதாணையாற்றுலங்கு
கொற்றநேமியுந் திரிதலிற்குறைபெறுகில்லேம்,

ஆதலின், யாம்ஸ்லப் பிரயோஜநார்த்தமாக விங்ஙனம் வந்திலேம், நமது நன்மை குறித்தே போந்தனம்; அஃதென்னையெனின், நினது தநயை சில நாளைக்கு முன் தத்வார்த்த நூல்களையும், கறபிலக்கண நூலையு நம்மிடத்துப்பயின்ற காலையில் அவளுடைய நுண்ணறிவு, ஒழுக்கம், சாதுர்ய முப்லியவைகளை யாம் கண்டு வியந்து, அவளழகிற்குங் குணத்திற்குமியைந்த இல

க்ஷியமுள்ள ஓ ரரசபுதல்வனை மணம புரிவிக்க எண்ணினேன். அவ்வெண்ணநெடுநாளாய் என்மனதிற்கிடந்து புழுங்கும்படி கங்கையாடுதற்பொருட்டு காசிக்குச்சென்று சிலநாள் வசித்திருந்து கங்கையில் நீராடி விசுவேசரைத் தரிசித்துக்கொண்டு இப்பொழுது தான் வருகின்றேன். யாத்திரைக்குச் சென்ற காலையில், கோதாவரியாற்றங்கரையிலுள்ள சித்திரபுரியில் சுசரித்திரனென்னு மோரரசிளஞ்செல்வன் உளன்; அவன் பால் யாம் சென்று அவன் அழகு, குணம் வித்யையாதிகளை யாம் பரீக்ஷித்தறிந்ததில் நமது சுபாஷணிக்கு நாயகனாக வியையத்தகுந்தவன் இக்குமரனே யெனக்கருதினேம்: அன்றியும், நாடுநகரம் ஏனைய செல்வங்களானும், வம்சத்தானும், அவன் நினக்குச் சரியானவனே யெனத்தெரிந்து கொண்டதன்பின் நினது வரலாற்றையுநமது கன்னிகையின் குணாதிசயங்களையு மவனுக்குணர்த்தி வந்தாம். அவ்வரசகுமாரனு நமது மாதுசிரோமணியை மணம் புரிதற்கு ஒருப்பட்ட மனதையுடையவனாயிருப்பதினானும், இம்மங்கைக்கு விவாகத்திற்குரிய பருவநேர்ந்தமையானும், இந்நிகழ்ச்சியை நினக்குணர்த்திப்போவான் வந்தனம், எனலும், அவ்வரசன் மிகமகிழ்ந்து, 'தங்கள் கிருபாநோக்கம் பெற்ற எங்கட்குக்குறைவென்னையுளது? தங்கள் பாலுபதேசம்பெற்ற எனது கன்னிகைக்கு அடையப்பெறாதனன்மைகள் யாவுள? அன்னாட்கு ஆசாரியரும், தந்தையும், தாயுநீரேயன்றி வேறி யாவர்? தங்களனுமதிப்படி நடப்பதன்றி எனக்கு வேறு செயல்களுளவோ,' வென்றான்.

அவ்வரசனது மொழிகளைக்கேட்ட முனிவர், 'மன்ன! விவாகத்திற்கு வேண்டியவைகளைச் சேகரித்துக்கொண்டு நமக்குத்தெரிவிப்பாயாக; யானெனது ஆசிரமஞ்செல்கின்றேன்; விடைதருவாயாக' வெனலும், அவ்வரசன் மீட்டுமெழுந்து வணங்கி, 'அவ்வண்ணமே செய்கின்றேன்; ஆயினும், ஒரு விண்ணப்பம், அடியேனுங் கெங்காயாத்திரை செய்வதில் விருப்பமுள்ளவனாயிருக்கின்றேன்; அவ்வியாத்திரையை முடித்து நான் பரிசுத்தனாயபின், எனது மங்கையர்க்கரசியின் வதுவைச்சடங்கினை நிறைவேற்றக்கருதியிருக்கின்றேன்: தாமவ்வண்ண மனுஜ்ஞை தருவதுமன்றி, கெங்கைமான்மியம், காசிமான்மியம், ஸ்நானவிதி சிவபூஜாவிதிகளை யுபதேசித்தருளவேண்டும், எனலும், முனிவர் அவ்வாறே காசிகாண்டத்திற்கூறிய பிரகாரம் சவிஸ்தாரமாயுபதேசித்து விடைபெற்றுத் தமதாச்சிரமம் போய்ச்சேர்ந்தார்.

அரசனது சபையிலிங்ஙனநிகழுழி, அவனது புதல்வன் பிரியதரிசனனென்பான் அறுசுவையுண்டியமர்ந்துண்டபின், விநோதமாய்க்காலம்போக்கக்கருதி சுபாஷணியுறைகின்ற கன்னியா மாடத்திற்குச்சென்றான்.

இன்னும் வரும்.

கதாப்பிரசங்கம்.

இந்நாட்டில் கிராமங்களிலும், பட்டினங்களிலும், கதாப்பிரசங்கங்கள் நடந்து வருகின்றன. அவைகளைச்செய்பவர்கள் வடமொழியே முற்றப் பயின்ற சாஸ்திரிகளும், இருமொழியினுஞ்சிற்சில பயின்ற பாகவதர்களும், பலமொழிகளினும் அவ்வவ்வயத்திற்கு வேண்டியவைகளை உணர்ந்த நாடகமாடுபவர்களுமாம்.

சாஸ்திரிகளென்னப்படுவோரிற்சிலர், புராணவாயிலாக சுலோகார்த்தங்களை பரிஷ்காரமாய்ப்பண்டிதர் முதல் பாமரரீறாகக்கேட்டு ஒவ்வொருவகையான ரஸங்களினு மூழ்கிக்களிக்கும்படிச் செய்கின்றனா. சிலரோ பண்டிதர்கட்கு மாத்திரம் சுவைதோன்றும்படி பதார்த்தங்களாகச்சொல்லுவார்கள். பின்னுஞ்சிலரோ, சுலோகங்களை ஓர்சசாதயமாகமாத்திரம் வைத்துககொண்டு பிரகிருதத்திற்குபயோக மில்லாத வேறு சிலகதைகளைச்சொல்லியும பாமரர்கட்கே திருப்திபண்ணுவாருமுளர்.

இவர்களுள் மூன்றாவதாகப் பகுத்துச் சொல்லப்பட்டவர்சள் பாமரர்கட்குக்கதாப்பிரசங்கம் பண்ணுவதனல் அல்ப பிரயோஜனத்தையடைவதைத்தவிர அறிவுடையோரால் புகழப்படுகிற கீர்த்தியைப்பெறுவதில்லை. அன்றியும், சுலோகார்த்த முதலியவைகளைத்தமது நுண்ணறிவினல் ஆராயப்புகும் நன்முயற்சியுமுண்டாவதில்லை. பாமரர்கட்கோ, ஞமலிகட்கு சுவப்னவஸ்தையில் பூர்வஞானந் தோன்றுவதுபோல், பிரசங்க சமயத்தில் சிறிது விவேகம் வந்ததாயினும், புராணபடன முடிந்தவுடனே அதுநீர்மேலெழுத்தைப்போல் தோன்றி மறைந்துவிடுவதால் பழயபடி அவிவேகம் ஆவரிக்கின்றது. இத்தகைய பிரசங்கம் செய்பவர்கட்குச்சிறிது பொருள்வரத்தும் மிகுந்தகண்ட சிரமும், கேட்பவர்கட்குச்சிறிது பொருட்செலவும் நித்திரை விழித்தல் முதலியவற்றல் மிகுந்த தேகசிரமமுண்டாவதுதான் பிரயோசனம்.

துறையூர் புதுஅக்கிரகாரத்திலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ ஈசுவரய்யர் அவர்கள் தமது கிரகத்தில் உள்ளூர் பிரமஸ்ரீ மகாதேவ சாஸ்திரிகள் அவர்களைக்கொண்டு இதற்குமுன் ஹாலாஸ்யமான்மியமும், இப்போது வால்மீகி இராமாயணமும், பிரசங்கித்து வரும்படி செய்திருக்கின்றனர். மேற்படி சாஸ்திரிகள் பிரஸங்கங்கள் சாதுர்யமாகவே கேட்பவர்கட்கெளிதில் பொருள் விளங்கும்படி தெளிவாய்ச்சொல்லிவருகின்றார்கள். மேற்படி அய்யரவர்கள் மெய்யன்புக்கேற்றபடி தெய்வகதியாய், சிதம்பரம் பிரமஸ்ரீ ஆநந்த பரமேசுவர தீக்ஷதர் அவர்களும், பவானி-ஆப்பக்குடல் பிரமஸ்ரீ இராமலி

ங்க சாஸ்திரிகளவர்களும், கும்பகோணம் வராகக்குளத்தெருவு சதுசாஸ்திரவேத கல்பகதருவித்யாசாலை ஸ்ரீமான் ச. யெ. மா. சேஷாத்ரியாசாரியர் அவர்களுமெழுந்தருளி ஸ்ரீமத் ராமயாணப்பிரசங்க நடத்தினர்கள். அப்பிரசங்கத்திற்கு வந்திருந்த சர்வ ஜனங்களும், அசுணப்பறவைகள் கானத்தை விரும்புவதுபோல, அன்னோர் வாக்குகளினின்றும் பகுளமாய் வருகின்ற வசனங்களாகிற இரத்ன விசேஷங்களைத்தங்கள் ஹிருதயமாகிற பொக்கிஷங்களில் செவிகளாகிற கைகளினல் வாங்கி வாங்கி சேமித்து வைத்துக்கொண்டு, பின்னும் அவர்கள் முகமண்டலத்தை எதிர்நோக்கினவண்ணமாகவேயிருந்தார்களே யொழிய, இன்றைக்குக்கதை யிவ்வளவில் நிறுத்தலாமென்னு யபீஷ்டமடைந்திலர்; ஆயினும், வக்தாக்களின் கண்ட சிரமத்திற்காக ஒருவாறுமனந்துணிந்து கதையை நிறுத்துவதற்கு ஒத்துக்கொண்டனர்.

இம்மகான்களின் பிரஸங்கதோரணை வெவ்வேறு விதமாக இருப்பினும், மூவகையமலர்கட்கும் மூவிதக்கனிகட்கும் வாஸனையும் ருசியும் வேறுபட்டிருப்பினும்' ஏற்றத்தாழ்வு கூறமுடியாதாற்போல இனிமையாகவேயிருந்தன.

இக்கதாசிரவணத்தைக் கேட்போரும் சொல்லுவோரு மிடையில் நிறுத்தாமல் நடத்திவருவர்களாயின், பெரியோர்சள் சேவை, பக்தி, தருமமுதலிய புண்ணியமும், புகழுமடைய்வார்கள்.

இன்னும் வரும்.

இரதோச்சவம்.

துறையூரில், வருஷந்தோறு நந்திகேசுவரசுவாமி கோயிலில் மாசிமகத்தில் பிரமோச்சவமும். மலை ஸ்ரீ பிரசன்ன வெங்கிடாசலபதி சுவாமி கோயிலில் வைசாகமாதம் விசாக நக்ஷத்ரத்தில் இரதோச்சவமு நடந்து வருகிற வழக்கம். அத்தகைய உச்சவங்சள் சிலவருஷங்களாக நடவாமல் நின்றுபோய்விட்டன; அதற்குக்காரணம், அயிவேஜிச் குறைவினலென்று நினைக்க ஹேதுவில்லை. தேவஸ்தான அதிகாரிகளின் சிரத்தையின் குறைவெனத்தோன்றுகின்றது.

அத்தகையவதிகாரிகள், நாளது பிலவஹு மாசி மகத்தில், மேற்படி நந்திகேசுவர சுவாமிக்கு இரத உச்சவம், வெகு சிரத்தையுடன் விநோதமாய் நடத்தினர்கள்; அவ்வண்ண நடத்தியதற்கு நந்திகேசுவரசுவாமியோ, அல்லது, அவரைச்சேவிக்கும்பொருட்டு வந்தகிராமவாஸிகளோ புண்ணியஞ்செய்தவர்கள் அறிகிலேம்.

சுவாமி இரதமுதல் நாள் நிலைக்குவராமலிருந்ததை மருநாள் ஜமீந்தாரவர்களாகிய மகா-ா-ா-ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசல ரெட்டியார் துரையவர்கள், தமது கிராம ஜனங்களுடன் பாதசாரியாக இரதநிற்குமிடத்திற்கு வந்து, இரதத்தை வடம் பிடிக்கச்செய்து, நிலையில் கொண்டுவந்து சேர்த்தார்கள்: அல்லாமலும், ஐந்தாந்திருவிழா உச்சவம் வெகு விமரிசையாக நடத்தி, எட்டாந்திருவிழாவன்று, சகல பிருதுகளுடனும், வாத்திய கோஷத்துடனும், வந்து சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு, தமதரண்மனைக்குச் சென்றார்கள். சப்மேஜிஸ்திரேட்டு மகா-ா-ா-ஸ்ரீ சீனிவாசய்யங்கார் அவர்களும் இரத நிலைக்கு வரும்பொருட்டு மிக்க உதவிபுரிந்தார்கள். இவ்வாறு இவர்கள் செய்யாவிடில் நந்திகேசுவர சுவாமி தெருவிலேயே நிற்கவேண்டியவர்தான். மேற்படி ஜமீந்தார் அவர்கள், தேவஸ்தான அதிகாரிகளுக்கு மவரைச்சேர்ந்தவர்களுக்கும் வஸ்திரமுதலிய பகுமானங்கள் நடத்தினார்கள். அதைப்பற்றியோசிக்குங்கால், இரதஉச்சவநடத்துவதில்மேற்படியதிகாரிகளுக்குபழயபடிசிரத்தைக்குறைவு இல்லாதிருக்கும் பொருட்டென்றேதோன்றுகின்றது; எங்கனமெனின், மலை ஸ்ரீபிரசன்ன வெங்கடாசலபதி சுவாமிக்கும் உச்சவநடத்தப்போவதாகக் கேள்விப்படுதலால் வெகுநாளாய் உச்சவநடவாமலிருந்து இந்தவருஷநடந்தமையால், ஏராளமான ஜனங்கள் சுவாமியையும் ஜமீந்தார் அவர்களையும் தரிசித்துக் களிப்படைந்தார்கள்; இவ்வண்ணம் சுவாமி காரியங்களில் எப்பொழுதும் ஜமீந்தார் அவர்கள் பெருமுயற்சி செய்துவருவார்களாகிலிவ்வூருக்கு க்ஷேமகரமென்பதில் சந்தேகமில்லை என்று நம்புகிறோம்.

வேணுகோபால சுவாமிகோயிலில், சென்ற வருஷத்திலு மிந்தவருஷத்திலும், சீரங்கத்தில் நடந்துவருவதைப்போல 'பகல்பத்து இராப்பத்து' என்னுங்கொட்டகை உச்சவத்தை நூதனமாய் தேவஸ்தானம் இனிஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ குப்புசாமி சாஸ்திரிகள் அவர்கள், வெகு சிறப்பாய் நடத்தி ஜனங்களுக்கு பிரமானந்தத்தை யுண்டுபண்ணினார்கள். மேற்படி உச்சவ நடத்துவதற்கு மேற்படி சாஸ்திரிகளவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாஸ மிகுதியை எம்மனோரால் சொல்லி முடிவதன்று. மேற்படி ஜமீந்தார் அவர்களுமொரு நாளைய மண்டகப்படியை வெகு விமரிசையாக நடத்தினார்கள். மற்றைய பிரபுக்களும் விசேஷமாய் சிரத்தை எடுத்துக்கொள்வார்களானல் இந்த உச்சவம் சிறப்பாய் நடந்துவருவது திண்ணம்.

இனி வருஷந்தோறுமிந்த உக்சவநடந்து வருவதற்கு ஷை சாஸ்திரிகள் அவர்கள் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். ஏனெனில், தாமேயிவ்வுச்சவத்தை நூதனமாக ஏற்படுத்தினமையால்.

தேவஸ்தாம் தர்மகர்த்தா மகா-ள-ள-ஸ்ரீ வீரமாச்சாம்பட்டி சுப்பய்யர் அவர்களும், இதற்குத்தகுந்த உதவிசெய்வார்களாயின், இதுசாசுவதமாய் நடந்தேறிவருவது திண்ணம. இவ்விலாகாவிற்குள் மிகுந்த பணக்காரராயும், தேவஸ்தானம் தர்மகர்த்தாவாயுமிருப்பதால் இவர்காலத்திலேயே தகுந்த பண்டு ஏற்படுத்தி அழியாதகீர்த்தியை யடைவார் என்று எண்ணுகிறோம்.

T. S. S.

MATRICULATION TAMIL TEXT EXAMINER FOR 1902.

Question I.

a. அரிச்சந்திர புராணமென்பதற்குப் பொருளென்னே? A. அரிச்சந்சந்திரனது ஒழுக்கத்தை விவரிக்குநூல்.

b. அரிச்சந்திர புராணமென்பதென்ன தொடர்? A. அரிச்சந்திரனைக்குறித்துச்சொல்லிய புராணமெனவிரிந்தால் இரண்டாமவேற்றுமையுருபும் பயனுமுடன்றொகத்தொகையும, அரிச்சந்திரனது புராணமென்று விரிந்தால் ஆறும்வேற்றுமைத்தொகையுமாம்

c. இப்புணர்ச்சிக்கு விதிகூறுக? A. இப்புணர்ச்சி வடமொழியாதலால் "இடையுரி வடசொலினியபபிய கொளாதவும்" என்னு நன்னூற்சூத்திரவிதியால் வருமொழி முதலிலுள்ள வலியியல்பாயிற்று. [Vide Sutra No 239.]

d. அரிச்சந்திரன் தந்தையின்பெயரென்னே? A. திரிசங்குமகர்ராஜன்.

e. அரிச்சந்திரன் எவ்விரதத்தை மேற்கொண்டொழுகுபவன்? A. சத்தியமென்னும் விரதத்தை.

f. அரிச்சந்திரன் என்பதற்கு வடசொல்லின் சப்தரூபமென்ன? A. ஹரிச்சந்த்ர.

g. அரிச்சந்திரனென்னதொடர்? A. உம்மைத்தொகைநிலைத்தொடர்.

h. அரிச்சந்திரனென்பதற்குப்பொருளென்னே? A. (பிரதாபத்தால்) சூரியனையும், (கீர்த்தியால்) சந்திரனையுமொப்பவன்; காத்தற்றொழிலால்) விஷ்ணுவையும், (மகிழ்விக்குந்தன்மையால்) சந்திரனையும் போன்றவனென்னினுமமையும்; அன்றியும், (தனது சக்தியால்) இந்திரனை சந்தோஷப்படுத்துபவன் எனவுமாம்.

i. ஹரி என்பதற்குப்பரியாயங்கள் என்னே? A. சூரியன், விஷ்ணு, இந்திரன்

j. புராணமென்னும வடமொழிப்பெயருக்குத்தமிழ்ப்பெயர் யாது? A. பழமை.

k. பழமையென்னும் பொருட்டாகிய புராணமென்னுஞ்சொல் நாலுக்காயின் எவ்வாகு பெயர்? A. அப்பண்புப்பெயரை யேற்று நிற்பதாகிய சரித்திரத்திற்காதலால் பண்பாகுபெயராய், பின்னரதற்கிடமான நாலுக்காதலால் தானியாகு பெயருமாய் வந்த இருமடியாகு பெயராம்.

l. புராணங்கட்கிலக்கணம் யாவை? A உலகத்தோற்றம், ஒடுக்கம் மன்வந்தரம், முநிவர்களரசர்கள் பரபு, அவர்கள் சரித்திரமென்னு மிவ்வைந்துமாம்.

m. இவ்வைந்து இலக்கணங்களையுமுடைய புராணங்கள் யாவை? A. பாகவதம், சைவம், ஸ்காந்தமுதலிய பதினெண்புராணங்கள்.

n. அப்புராணவிலக்கணங்கள் முழுதும் அமையாத விந்நூற்கு புராணமென்னும பொருள் எவ்வாறு வந்தது? A. இந்நூல் சிலபுராணங்களிற் கூறப்பட்டிருக்கிற அரிச்சந்திரனது குணாதிசயங்களைக் கூறுதலால் அம்முதநூற்பெயர்வழி நூலாகிய இதற்குக்காரணக்குறியாகப் போந்ததென்க. புராணங்கட்கிடைந்த மேன்மைபோன்ற மேன்மையைப் பெற்றிருக்கின்றமையால் உவமையாகுபெயராயிற்றெனினுமாம்.

Question II.

a. இந்நூலாசிரியர் பெயரென்னே? A. வீரகவிராயர்.

b. இவருறைவிடம் யாது? A. பாண்டியநாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீவைகுண்டமென்னும் விஷ்ணுஸ்தலத்தை யடுத்துள்ள நல்லூர்.

c. ஆசு, மதுரம், சித்திரம், வித்தார மெனுநாற்கவிகளுள் எக்கவி பாடுதலில் வல்லுநர்? A பிறர் இஷ்டப்படி விரைந்துபாடுகின்ற ஆசுகவி பாடுவதில் சிறப்புற்றவர்.

d. அது எதனலறியப்படுகின்றது? A. பாயிரச்செய்யுளில் "நல்லூர்வீரன் ஆசுகவிராயன்" என்னும் பகுதியில் வழங்கப்படுவதால்.

e. இக்கவிராயர் யாதுபற்றி இப்புராணம் பாடினார்? A. தம்முடைய கல்வித்திறமையையும் கவிசெய்யுந்திறமையையும் பிறர்க்குப்பயன் படுத்தவும், சத்தியவிரதத்தின் மேன்மையை யெல்லோருக்குமுணர்த்தும் பொருட்டும்.

f. இப்புராண மெவ்வகைப் பாவினங்களாற் பாடப்பட்டிருகின்றன? A. விருத்தப்பாக்களால்,

g. இந்நூற்கு முதநூல்களெவை? A. வடமொழியிலுள்ள புராணங்களும், தென்மொழியிலுள்ள அரிச்சந்திரவெண்பாவுமாம்.

h. இந்நூல் யாங்ஙனமரங்கேற்றப்பட்டது? A. பாண்டி நாட்டிலுள்ள திருப்புல்லாணி யென்னுந் திவ்விய தேசத்துப்பெருமாள் சந்நிதியிலுள்ள சக்கர தீர்த்தக்கரைமேலிருக்கின்ற மண்டபத்தில்.

i. இதனையரங்கேற்றிய காலம் யாது? A. சாலீவாகனசகம் 1446ல்.

j. இற்றைக்கெத்தனை வருஷங்களாகின்றன? இப்பொழுது சாலிசகம் 1824 ஆதலால் 377 வருஷங்களுக்குமேல் நடக்கின்றன.

k. இவர் மதமென்னை? A. சைவம்.

l. அது எதனால் விளங்குகின்றது? A. இந்நூலில் முதற்கண் செய்துள்ள கடவுள் வணக்கத்தில் சிவபெருமான்உமாதேவியார், விநாயகர் முதலியோரைத்துதித்திருப்பதால்.

m. இந்நூலில் பகுக்கப்பட்டுள்ள காண்டங்களும் செய்யுட்களுமெத்தனை? A. கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பாயிரம், நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு ஒழிந்தகாண்டங்கள் பத்து. செய்யுட்கள் 1215.

n. இந்நூற்கண்ணுள்ள பெருங்காப்பிய விலக்கணங்கள் யாவை? A. முதற்கண் மங்களச்செய்யுளை யுடைத்தாயிருத்தலும், அறம்பொருள் இன்பம் வீடு என்னும் பயனைத்தருதலும், சிறந்த ஓர் அரசனைப் பற்றிக்கூறுதலும் நாடு நகரம் சந்திர சூரிய உதயாஸ்தமனவர்ணனை விவாஹமகட்பேறு முதலியவைகளுமாம்.

Question III.

a. பாயிரத்தின் பரியாயப்பெயர்களெவை? A. முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புரவுரை தந்துரை, என்பன.

b. பாயிர விலக்கணங்கள் யாவை?

A. "ஆக்கியோன் பெயரே, வழியே, யெல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,

கேட்போர், பயனோடா யெண்பொருளும்,
வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே;
காலங்களனே காரணமென்றிம்
மூவகை யேற்றி மொழிநருமுளரே."

என்னுமிப்பதினொன்றுமாம்.

c. தண்கவிகை என்பதற்குப்பொருளென்னை? A. குளிர்ச்சியான குடை.

d. தண்கவிகை யென்னதொடர்? A. பண்புத்தொகை.

e. கவிகை யென்பதற்குப்பொருளென்னை? A. கவிந்திருத்தல்.

f. அறுவகைப்பெயர்களுள் கவிகை யென்பதெப்பெயர்? A. ஐ, விகுதிபெற்று பகுதி விகுதியென்னு மிரண்டுருப்பான் முடிந்த தொழிற்பெயர்ப்பகுபதமாம்.

g. அத்தொழிற்பெயர் இங்கே குடைக்குப்பெயராக வந்தமைக்குக்காரணமென்னை? A. தொழிலாகுபெயராக வந்தது.

h. தன்கவிகை என்னும் பதத்தில் 'தண்' என்னும் விகுதிகுன்றிய பண்புப்பெயர் எதனைக்குறிக்கின்றது? A. அநீதியாகிய வெப்பத்தை தணித்து நீதியாக அரசாளுவதால் ஜனங்களுக்கு சுகத்தைக் கொடுப்பதைக் குறிக்கின்றது.

i. குரிசிலென்னும் ஆண்பாற் சிறப்புப்பெயருக்குப் பொருளென்னை? A. பெருமையிற்சிறந்தவன்.

j. இச்செய்யுளிலுள்ள கருத்தாவாகுபெயர் யாது? A. 'கவி' என்னுஞ்சொல்.

k. கவிராஜனென்பதற்குப்பொருளென்னை? A. புலவர்கட்கரசன்.

l. சம்ஸ்கிருதத்தை வடமொழி என்றும், தமிழைத் தென்மொழி என்றுங்கூறுவதென்னை? A. அவைகள் வடநாட்டினுந் தென்னாட்டினும் வழங்குவதனால்.

m. சோலைக்கண்ணுள்ள குரங்குகள் எதனை எதுவாக மயங்கிற்று? A. மத்தள முழக்கத்தை யிடிமுழக்கமாக.

இன்னும் வரும்.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுல்ல ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள, தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பலஉளவாயினும், வித்வான்கள்பாஷையும் நல்லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்குக்கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்துவருவார்களென நம்புகிறோம்.